# தமிழ் முத்த பிரசைகள் சங்கம் (நி.ச.வே.) பதிவு

மின் சஞ்சிகை E- Magazine

TSCA

Tamil Senior Citizens' Association (NSW)

July 2021 Issue 6 Editor ; VM Thevarajan


## படித்ததில் பிடித்தது .......

தஞ்சையில் இருந்து, சென்னைக்கு பத்திரிகை பணிக்கு வந்தபோது நல்ல சம்பளம்தான். ஆனாலும் ஊதாரி. வீட்டுக்கு போன் போட்டு, ஏதாவது பொய் சொல்லி, " ரெண்டாயிரம் மணியார்டரில் அனுப்புங்கப்பா" என்பேன். (அப்போது நெட் பேங்க்கிங் கிடையாது). அப்பாவும் உடனடியாக அனுப்பிவிடுவார். (சம்பளத்தைவிட அதிகமாக அப்பாவிடம் வாங்கியிருக்கிறேன்.) மணியார்டரில் பணம் அனுப்பும்போது, அந்த படிவத்தில் சில வரிகள் ஆங்கிலத்தில் எழுதி அனுப்புவார் அப்பா. (ஆங்கிலத்திலும் மிகப் புலமை பெற்றவர்) அதைக் கையால் எழுதாமல், யாரிடமாவது தட்டச்சு செய்து அனுப்புவார். அது அவரது வழக்கம்.

ஒவ்வொரு முறையும், "மை டியர் சன்.. (my dear son) என்று ஆரம்பிக்கும் அந்த குறுங் கடிதம். ஒருமுறை மணிஆர்டர் வந்தபோது அதில் தட்டச்சிலிருந்த வார்த்தையைப் பார்த்து அதிர்ந்தேன். மை டியர் சன் (my dear son) என்பதற்கு பதிலாக மை டியர் சின் (my dear sin) என்று தட்டச்சியிருந்தது. ஆங்கிலத்தில் Sin என்றால் "பாவம்" என்று பொருள். அப்பா வேண்டுமென்றே அப்படி தட்டச்சு செய்ய சொல்லியிருக்க மாட்டார். ஆனாலும் "சின்" என்ற வார்த்தை மனதை ஏதோ செய்தது. அந்த மணியார்டர் பணத்தை வாங்காமல் திருப்பி அனுப்பிவிட்டேன். அவருக்கு அதிர்ச்சி. உடனடியாக என் அலுவலகத்துக்கு தொலைபேசினார். "ஏம்பா பணம் திரும்பி வந்துருச்சு" என்றார் பதட்டமாக. அப்பாவிடம் எப்போதுமே வெளிப்படையாகவே பேசுவேன்: "மைடியர் சின் அப்படின்னு இருந்துச்சுப்பா... அது தான் " என்றேன். அப்பா சிரித்தார். நான் அவரை மிக கவனித்திருக்கிறேன். பெருந்துன்ப நேரங்களில் அவர் சிரிக்கவே செய்திருக்கிறார். அப்படியானதொரு துயரத்தை வெளிப்படுத்திய அந்த சிரிப்பை இனம் கண்டுகொண்டேன். அப்படியே போனை வைத்துவிட்டார் அப்பா. அப்போது நான் பணியாற்றிய, இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தில் இருந்து வந்துகொண்டிருந்த தமிழன் எக்ஸ்பிரஸ் இதழில். மறுநாள் காலை.. அலுவலகத்ததில் இருந்த எனக்கு செக்யூரிட்டியிடமிருந்து (இன்டர்காம்) அழைப்பு. என்னைப் பார்ப்பதற்கு அப்பா வந்திருப்பதாக தகவல் சொன்னார். இரண்டாவது மாடியிலிருந்து ஓடி வந்தேன். செக்யூரிட்டி அலுவலகத்தில் அப்பா அமர்ந்திருந்தார். உள்ளுக்குள் ஏதோ செய்தாலும், சாதாரணமாக முகத்தை வைத்தபடி, "என்னப்பா திடீர்னு.." என்றேன். அப்பா என் தலைவருடி, "தம்பி.. அப்பா உன்னை சின்.. அதான் பாவம்னு நினைப்பேனா..? உனக்கென்ன ராஜா... நீதான என் சொத்து... அந்த டைப்ரட்டிங்காரர் ஏதோ அவசரத்துல தப்பா டைப் அடிச்சுட்டார். இதுக்கெல்லாமா வருத்தப்படுறது? பணத்தை திருப்பி அனுப்பிட்டியே.. சிரமப்படுவேல்ல.. . அதான் கொடுக்க வந்தேன்" என்றார் அப்பா. முட்டிக்கொண்டு வந்த அழுகையை கட்டுப்படுத்திக்கொண்டு ஏதேதோ பேசினேன். யோசித்துப் பார்க்கையில் பிள்ளைகள் என்போர், பெற்றவர்களுக்கு "சின்" என்றுதான் தோன்றுகிறது. ஆனால், அப்பாக்கள் வரம்.

- *தாயிடம் நிரூபியுங்கள்*--* கடைசி வரை அன்பாக இருப்பேன் என்று.

(தொடர்ச்சி 2 ம் பக்கம்)

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

- *தந்தையிடம் நிரூபியுங்கள்* - கடைசி வரை உங்கள் பெயரை காப்பாற்றுவேன் என்று.
- *மனைவியிடம் நிரூபியுங்கள்* - கடைசி வரை என் காதல் உனக்கானது மட்டும் என்று.
- *சகோதரனிடம் நிரூபியுங்கள்*- கடைசி வரை உனக்கு உறுதுணையாய் இருப்பேன் என்று.
- *சகோதரியிடம் நிரூபியுங்கள்* - கடைசி வரை உனக்கு செய்யும் சீர் ஒரு சுமையே இல்லை என்று
- *மகனிடம் நிரூபியுங்கள்* -கடைசி வரை உலகமே எதிர்த்தாலும் நான் உன் பக்கம் என்று
- *மகளிடம் நிரூபியுங்கள்* - கடைசி வரை உன் கண்ணில் நீர் வழிந்தால் என் கண்ணில் ரத்தம் வரும் என்று.

வேறு எவருக்கு நீங்கள் எதை நிரூபித்தாலும் *அது கடலில் கொட்டிய பெருங்காயமே*. தோற்று போனால் வெற்றி கிடைக்குமா ?

- *அம்மாவிடம் தோற்று போ, அன்பு அதிகரிக்கும்..*
- *அப்பாவிடம் தோற்று போ, அறிவு மேம்படும்..*
- *துணையிடம் தோற்று போ, மகிழ்ச்சி இரட்டிப்பாகும்..*
- *பிள்ளையிடம் தோற்று போ, பாசம் பன்மடங்காகும்..*
- *சொந்தங்களிடம் தோற்று போ, உறவு பலப்படும்..*
- *நண்பனிடம் தோற்று போ, நட்பு உறுதிப்படும்..*
- *ஆகவே தோற்று போ,*

தோற்று போனால் வெற்றி கிடைக்கும்

. ... அன்புடன் வாழுங்கள் !

......எழுத்தாளர் சுஜாதா

## *அவர் இறந்துவிட்டார்....*

“பெரிசு போயிடுச்சு, தகனம் பண்ணணும்” சொல்லிக் கொண்டே சென்றார்கள். மெல்ல மெல்ல எட்டிப் பார்த்தேன். மூச்சு இல்லைத் தான்... ஆனாலும் இப்போது தான் இவர் இறந்திருக்கிறார் என்பதை மட்டும் என்னால் நம்ப முடியவில்லை. இருபது வருடங்கள் முன் அவர் மனைவி இறந்த பின் “சாப்பிட்டீர்களா?” என்று யாரும் கேட்காத நேரத்திலேயே அவர் இறந்திருந்தார், யாரும் கவனிக்கவேயில்லை. பொண்டாட்டி போனதுமே போய்த் தொலைய வேண்டியது தானே சனியன்” என்று அவர் காது படவே மருமகள் பேசிய போது... அவர் இறந்திருந்தார். யாருமே கவனிக்கவில்லை. தாய்க்கு பின் தாரம், தாரத்துக்கு பின் வீட்டின் ஓரம் மட்டுமே... என்று நடைப் பிணமாக வாழ்ந்த போதே.... அவர் இறந்திருந்தார். யாருமே கவனிக்கவேயில்லை.

“காசு என்ன இங்கே மரத்திலையா காய்க்குது?” என்று அன்றொரு நாள் மகன் அமில வார்த்தை வீசிய பொழுதில் அவர் இறந்திருந்தார். யாருமே கவனிக்க வேயில்லை. “என்னங்க! இந்த கிழத்தை ரொம்ப தூரத்திலே இருக்கிற ஏதாவது முதியோர் இல்லத்திலை விட்டு விட்டு தலை முழுகிட்டு வந்திடுங்க...” என்ற கடுஞ் சொல் காதில் விழுந்த நொடி குறுகிப் போய் அவர் இறந்திருந்தார். யாருமே கவனிக்கவேயில்லை. “உனக்கென்னப்பா பொண்டாட்டி தொல்லை இல்லை” என்று வாழ்த்துவது போல ஏளனமாய் கிண்டலடிக்கப்பட்ட அந்த நொடியிலேயே..... அவர் இறந்திருந்தார். யாருமே கவனிக்கவில்லை. இப்போது தான் இறந்தார் என்கிறார்கள் எப்படி நான் நம்புவது?

நீங்கள் செல்லும் வழி நெடுகிலும் இப்படி பலர் பாசத்துக்கு ஏங்கி இறந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு வினாடியாவது நின்று பேசி விட்டுச் செல்லுங்கள்.. உங்கள் அருகிலேயே இறந்து கொண்டிருக்கிறார்கள். புரிந்து கொள்ளுங்கள். பலர் வாழும்போதே இறந்து விடுகிறார்கள். புதைக்கவோ எரிக்கவோ தான் சில ஆண்டுகளாகிறது....!

### அனுபவத்துக்கும், பக்குவத்துக்கும்

சின்ன வித்தியாசம் தான். அடுத்தவர்களை திருத்துகிறோம் என்று நினைத்து அறிவுரை சொன்னால் அது அனுபவம்.

பட்டு திருந்தட்டுமென்று அமைதியாய் இருந்தால் அது பக்குவம் !

# வாழ்க்கையின் தத்துவம்

இதை படிக்கும் முன் உங்கள் மனதை ஒரு நிலைப்படுத்திய பின்னர் படியுங்கள். அப்போது தான் ஒரு தெளிவு உங்களுக்குள் பிறக்கலாம்...

(இது ஆத்மார்ந்த மூத்தோரின் அறிவுரை)

உன்னை வாழ்த்த மனம் இல்லாதவர்கள் இருப்பார்கள். அவர்களைப் பற்றி கவலைப்படாதே.

நீ எதை செய்தாலும் அதில் ஒரு குறையை கண்டுபிடிக்கக்கூடிய மனிதர்களும் இருந்து கொண்டுதான் இருப்பார்கள். அதையும் பெரிது பண்ணாதே.

உன் லட்சியம் எதுவோ அதை நோக்கி பயணம் போ.

ஒன்றை மட்டும் தெரிந்து கொள்....

*ஒவ்வொரு மனிதனும்*

*தனித்தனி ஜென்மங்கள்.*

*தனித்தனி பிறவிகள்*

*தனித்தனி ஆன்மாக்கள்*

அவர்களுக்கென்று தனித்தனி ஆசாபாசங்கள் இருக்கும். குணங்களும் இருக்கும்.அதன் வழியில் தான் அவர்களின் பயணமும் இருக்கும். *அவர்களை ஒழுங்கு படுத்துகிறேன் என்று வேதனைகளை சுமந்து கொள்ளாதே. அவர்கள் போகும் வரை போகட்டும். போய் ஒரு அனுபவத்தை பெற்றபின் திரும்பி வருவார்கள்.

அதுவரை நீ பொறுமையாக இருக்க வேண்டும். அவர்கள் போன பாதை நல்லதா? கெட்டதா? என்பதை அவர்களாக உணர்ந்தால்தான் அவர்களுக்கு ஒரு உண்மை தெரியும். *அந்த உண்மையை நீ முன்கூட்டியே சொன்னால் உன்னை அவர்களுக்கு பிடிக்காது.*

இதுதான் வாழ்க்கையின் தத்துவ உண்மை.

அவர்களது பூர்வ புண்ணியத்தின் அடிப்படையில் தான் அவர்களின் குணங்களும் செயல்களும் இருக்கும். அது உடன் பிறந்தவர்களாக இருந்தாலும், நண்பர்களாக இருந்தாலும், கணவன், மனைவியாக இருந்தாலும், பெற்ற குழந்தைகளாக இருந்தாலும், பேரன் பேத்திகளாக இருந்தாலும், எந்தஉறவுகளாக இருந்தாலும், *அவர்களது பிறவி குணம் ஒரு போதும் மாறாது.* எதைச் செய்ய வந்தார்களோ அதை செய்வதுதானே அவர்களின் விதி. இதை நீ மாற்றி அமைக்க முடியுமா...?

ஒதுங்கி நின்று வேடிக்கை பார்!....

*பந்த பாசத்தில் உள்ளே விழுந்து அறிவுரை சொல்லுகிறேன் என்று கெட்ட பெயரை சம்பாதித்துக் கொண்டிருக்காதே.*

*அவர்களுக்கு அனுபவம் தான் குரு.*

அந்த அனுபவம் ஏற்பட்ட பிறகு தன்னை மாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு விதி இருந்தால் தன்னை திருத்திக் கொள்வார்கள். அதுவரை நீ பொறுமையாக இரு.

செயற்கையாக ஒரு குணத்தை உருவாக்கி உன்னிடம் அன்பை காட்டினாலும் தான் யார்?, தன் குணம் என்ன?, என்பதை ஒரு நாள் வெளிப்படுத்தி விடுவார்கள். *எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தோடு இருந்து கொள்ள பழகிக் கொள்.*

நாம் வந்து போகும் உலகத்தில் பிறந்திருக்கிறோம். அவரவர்களுக்கு என்ன வேஷம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். அதைத் தவிர நாம் வேறு எதையும் செய்து காட்ட முடியாது.

எல்லையில்லாத அன்பை வைத்திருந்தேன் என்னை ஏமாற்றி விட்டார்கள் என்று புலம்பிக் கொண்டு இருக்காதே. கடலுக்கும் ஒரு எல்லை வைத்திருக்கிறான் கடவுள்.

அதையும் மீறி சிலவேளைகளில் இறைவன் வகுத்த எல்லையை கடல் தாண்டி விடுகிறது. அது போல் *இயற்கையின் சுபாவங்களைப் போல் மனித இயற்க்கை சுபாவங்கள் சில நேரங்களில் தங்களை வெளிப்படுத்தி விடும்.*

நீ உன்னை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாயோ அப்படி வைத்துக் கொண்டு வாழப்பழகிக் கொள். அதில் நன்மை வந்தாலும், தீமை வந்தாலும் , உனக்கும் ஒரு அனுபவம் கிடைக்கும் . அதை வைத்து உன்னையும் திருத்திக் கொள்ளலாம். *இன்பமானாலும் துன்பமானாலும் அதை நீயே சந்திக்க கற்றுக்கொள்.*_அதை பகிர்ந்து கொள்வதற்கு ஒரு துணையைத் தேடாதே. *உன் இன்ப துன்பத்தில் பங்கு பெறுவதற்கு இந்த பிரபஞ்சத்தில் ஒருவர் பிறந்திருந்தால் நிச்சயம் அவர் உன்னை கைவிடாமல் உன்னோடு சேர்ந்தே பயணிப்பார். அது உன் பிறவி பிராப்தத்தை பொறுத்து இருக்கிறது. அப்படி அது நடந்து விட்டால், எந்த

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

**சூழ்நிலையிலும் உன்னோடு இணைந்தே இருப்பார்.***

**நீ பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், வரும் துன்பத்தை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலை உருவாக்கிக் கொள். *மனிதன் மீது வைக்கும் நம்பிக்கையை விட இறைவன் மீது வைக்கும் நம்பிக்கையை அதிகரித்துக் கொள்.***

**உன் கண்ணீரும். உன் கவலையும் உன்னை பலவீனமாக காட்டிவிடும்... அழுவதாலும் சோர்ந்து போவதாலும் ஒன்றும் நடக்கப் போவதில்லை. எப்படி இருந்தாலும் நீதான் அந்த சுமையை சுமந்து ஆகவேண்டும். *அழுது சுமப்பதை காட்டிலும். ஏற்று சுமப்பது உனக்கு சிரமம் இல்லாமல் இருக்கும்.***

***தைரியமும் தன்னம்பிக்கையும் தான் ஒரு மனிதனை உலகத்தில் வாழ வைக்கும் என்ற உண்மையை உணர்ந்துகொள்.* இந்த பக்குவத்தை அடைந்து விட்டால் எத்துன்பமும் உன்னை நெருங்காது என்பதை உணர்ந்துகொள்.**

**இப்பதிவை பத்திரப்படுத்தி, உங்களுக்கு நேரம் கிடைக்கும் பொழுது பொறுமையாக மீண்டும் ஒரு முறை படிக்கவும்...**




## *பட்டினத்தார் சொன்னது...*

உணவைத்தான் உண்டேன், எப்படி மலமானது? உயிரோடு தானே இருந்தேன் எப்படி மாண்டு போனேன்? மலம் தான் உணவாக இருந்ததா? மரணம் தான் வாழ்வாய் இருந்ததா? இந்தச் சுருங்கிப் போன உடம்பு தான் இதுவரை இளமையைச் சுகித்ததா? இந்தச் சூம்பும் மார்புகளுக்கா இத்தனை கண்கள் வட்டமிட்டது. பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும் என்று பட்டினத்தார் பாடியது இந்த நிலையற்ற பொய் வாழ்வைத் தானா? "இன்னும் இழுத்துக் கொண்டிருக்கிறார் செத்துத் தொலைய வில்லையே" என்று மனைவியும், சுற்றமும் பேசியது அவர்கள் என்னை நூறாண்டு வாழ்க வென வாழ்த்தியது நினைவுக்கு வந்தது. இதுவரை எனது கோடாரியால் நான் எனது வேரையல்லவா வெட்டியிருக்கிறேன்.

நான் விரும்பியவையெல்லாம் என்னை வெறுத்துக் கொண்டிருந்தது. இளமையாய் இருக்கும் போதே முதுமையை பழகியிருக்க வேண்டும். பாயும் நோயும் தவிர யார் வரப்போகிறார்கள். இறந்தாலும் எனக்காக யார் அழப் போகிறார்கள். பிணமான பின் இந்த மாளிகையும் பணமும் எனது என்று நான் சொந்தம் கொள்ளவா முடியும். சந்தனத்தால் மணந்த உடல் என்றாலும், இறந்தால் மணக்கவா போகிறது. கண்ணே மனியே என்று கொஞ்சிய தாயும், காதலா என் உயிரே என்று சொன்ன மனைவியும், பிணமான பின் சுடுகாட்டில் அல்லவா விட்டுச் செல்வார்கள். பிரிய மாட்டேன் என்று சொன்னவர்கள் பிணம் என்று வீசிச் சென்ற பிறகு, மண் என்னைப் பார்த்து "மகனே! நான் இருக்கிறேன் மடியில் வந்து உறங்கு என்று என்னை மார்போடு அணைத்துக் கொண்டது. அருந்தின மலமாம், பொருந்தின அழுக்காம், வெறுப்பன உவப்பாம், உவப்பன வெறுப்பாம். உலக பொய் வாழ்க்கை.

நீ நீயாக இரு. உங்கள் உடலில் இருக்கும் ஒவ்வொரு உறுப்பும் நீங்கள் உயிருடன் இருக்கும் அத்தனை நாளும் பயன் படுத்தவே படைக்கப் பட்டிருக்கிறது. அதனால் வயதானால் அந்த நோய் வரும், வயதானால் இந்த நோய் வரும் என்று சொன்னால், தயவு செய்து நம்பாதீர்கள். உங்கள் கூடவே வாழும் மிருகங்களைப் பாருங்கள். மரணம் வரும் வரை தன் வேலைகளை தானே செய்து கொள்கிறது. எந்தப் பறவைகளும் தனக்கு வயதாகிவிட்டது என்று தன் குஞ்சிடம் சாப்பாடு கேட்பதில்லை. எந்த மாடும் படுத்துக் கொண்டு தன் கன்றிடம் தண்ணீரோ உணவோ கேட்பதில்லை. எந்தப் பூனையோ நாயோ படுத்த படுக்கையாக இருந்து கொண்டு மலம் கழிப்பதில்லை. மரணம் அடையும் வரை ஆரோக்கியமாக சுயமாக தன் வேலைகள் அனைத்தையும் செய்கின்றன.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

(4ம் பக்கத் தொடர்ச்சி)
மனிதர்கள் மட்டும் தான் வயதானால் நோய் வரும், இயலாமை வரும் என்று நம்பி அடுத்தவர்களை எதிர்பார்த்து வாழ ஆரம்பிக்கிறார்கள்.

நன்கு ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். முதுமை என்று எதுவுமில்லை. நோய் என்று எதுவுமில்லை. இயலாமை என்று எதுவுமில்லை. எல்லாம் உங்கள் மனதிலும் அதன் நம்பிக்கையிலும் தான் இருக்கிறது. சிந்தனையை மாற்றுங்கள். ஆரோக்கியமாக வாழுங்கள். நீங்கள் எதை நம்புகிறீர்களோ அதுவாகவே ஆகிறீர்கள்.

## ஆறு மனமே ஆறு ! !

ஆறு மனமே ஆறு அந்த ஆண்டவன்
கட்டளை ஆறு
தேர்ந்து மனிதன் வாழும் வகைக்கு தெய்வத்தின்
கட்டளை ஆறு

ஒன்றே சொல்வார் ஒன்றே செய்வார்
உள்ளத்தில் உள்ளது அமைதி
இன்பத்தில் துன்பம் துன்பத்தில் இன்பம்
இறைவன் வகுத்த நியதி
சொல்லுக்கு செய்கை பொன்னாகும் வரும்
துன்பத்தில் இன்பம் பட்டாகும்
இந்த இரண்டு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும்

உண்மையை சொல்லி நன்மையை செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும்
நிலை உயரும் போது பணிவு கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்
உண்மை என்பது அன்பாகும் பெரும்
பணிவு என்பது பண்பாகும்
இந்த நான்கு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும்

ஆசை கோபம் களவு கொள்பவன்
பேச தெரிந்த மிருகம்
அன்பு நன்றி கருணை கொண்டவன்
மனித வடிவில் தெய்வம்
இதில் மிருகம் என்பது கள்ளமனம் உயர் தெய்வம்
என்பது பிள்ளை மனம்
இந்த ஆறு கட்டளை அறிந்த மனது ஆண்டவன்
வாழும் வெள்ளை மனம்

மேலே தரப்பட்டுள்ள பாடலின் அர்த்தத்தில் எட்டு திருக்குறள்கள் ஒளிந்திருக்கின்றன. அவை எவை என்பதை சற்று ஆய்ந்து பாருங்கள். விடை அடுத்த இதழில் பிரசுரமாகும்.

## சும்மா*== படிச்சு தான் பாருங்களேன்

அடிக்கடி நாம் பாவிக்கும் வார்த்தை தான், இந்த *சும்மா*.

அது சரி *சும்மா* என்றால் என்ன??

பேச்சு வழக்கு சொல்லாக இருந்தாலும், தமிழ் மொழியில் உள் வாங்கப் பட்டுள்ள ஒரு வார்த்தை இந்த *சும்மா!!*

"சும்மா" என்கிற இந்த வார்த்தைக்கு மட்டும் தமிழில் பல அர்த்தங்கள் உண்டு என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?*

வேறு மொழிகளில் இல்லாத சிறப்பினை நாம் அடிக்கடி கூறும் இந்த "சும்மா" எனும் வார்த்தை எடுத்துக் காட்டும்*.

1. கொஞ்சம் "சும்மா" இருடா? (அமைதியாக/Quiet*)
2. கொஞ்ச நேரம் "சும்மா" இருந்து விட்டுப் போகலாமே? (களைப்பாறிக் கொண்டு)
3. அவரைப் பற்றி "சும்மா" சொல்லக் கூடாது! (அருமை/in fact)
4. இது என்ன "சும்மா கிடைக்கும்னு நினச்சியா? (இலவசமாக/Free of cost)
5. "சும்மா" கதை அளக்காதே? (பொய்/Lie)
6. "சும்மா" தான் இருக்கு. நீ வேண்டுமானால் எடுத்துக் கொள்* -
7. "சும்மா" *"சும்மா" கிண்டல் பண்ணுறான்.* (அடிக்கடி/Very often)*
8. இவன் இப்படித்தான்.. சும்மா சொல்லிக்கிட்டு இருப்பான். (எப்போதும்)
9. இந்தப் பெட்டியில் வேறெதுவும் இல்லை "சும்மா" தான் இருக்கின்றது (காலி/Empty)
10. சொன்னதையே "சும்மா" சொல்லாதே.
11. ஒன்றுமில்லாமல் "சும்மா" போகக் கூடாது- (வெறுங் கையோடு/Bare)
12. "சும்மா" தான் இருக்கின்றோம்*-
13. அவன் *"சும்மா" ஏதாவது உளறுவான்*

நாம் அன்றாடம் பாவிக்கும் இந்த *"சும்மா"* என்கிற ஒரு சொல். நாம் பயன் படுத்தும் இடத்தின் படியும் தொடரும் சொற்களின் படியும் பல விதமான அர்த்தங்களைக் கொடுக்கிறது*. *உலகில் உள்ள மற்ற மொழி அனைத்தும் வாயினால் பேச, செவிக்குக் கருத்தை உணர்த்துகின்றவை*. *ஆனால் தமிழ் மொழி இதயத்தாலே பேசி இதயத்தால் உணர வைக்கும் மொழியாகும்*



# பெருமை

சாயங்காலம் எப்ப ஆகுமுன்னு காத்துக் கிடப்பார்கள். அவர்கள் எல்லோருமே 60 வயதுக்கு மேற்பட்ட பணி ஓய்வு பெற்று மகன் வீட்டு லையோ, இல்லை மகள் வீட்டுலையோ, தனியாகவோ இருக்கிறவர்கள் தான். அவர்களுக்கு ஒரு நாளின் 24 மணி நேரத்திலே சந்தோசமான நேரம் அந்த சாயங்காலம் 4 மணியில இருந்து 7 மணி வரைக்கும்தான்.

தினம் ஆறில் இருந்து 10 வரைக்கும் ஆட்களின் எண்ணிக்கை மாறும். அவர்கள் வாக்கிங் மாதிரி போயிட்டு அந்த பார்க்கிலே கூடுவார்கள். அங்கே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல், பொருளாதாரம் எல்லாம் அலசப்படும். ஆனால் வீட்டைப் பற்றிப் பேசினால் சோகமாகிவிடு வார்கள். அங்கே ரெகுலரா வரும் யாராவது திடீரென வரவில்லை என்றால் கவலைப்படுவார்கள். ஒரு வேளை உடம்பு சரியில்லையோ, காலன் பிரிச்சிடுவானோ என்று கவலைப்படுவார்கள். அவரோட வீட்டுப்பக்கமா திரும்பிப் போகும்போது ஒரு பார்வை பார்த்து விட்டுப் போவார்கள். ஏதாவது பந்தல் கிந்தல் போட்டுருக்கான்னு. ஏனென்றால் அவங்க இருக்குறதே அந்த வீட்டுக்குச் சுமையாக நினைப்பவர்கள் ஏதாவது ஒன்று நடந்தால் இவர்களுக் கெல்லாம் சொல்லிக்கொண்டா இருக்கப் போகிறார்கள். சட்டுப்புட்டுன்னு சோலிய முடிச்சிடுவார்கள். கடைசிக் காலத்தில் கூட நண்பனைப் பார்க்க முடியாது போனது உறுத்தலாக இருக்கும் இது அவர்கள் வாழ்க்கைப் புத்தகத்தின் கடைசி அத்தியாயம்.

அங்கே ரெகுலரா வாறவர்தான் ராமானுஜம். அவரோட பிரெண்ட் தான் முனுசாமி. ரெண்டுபேரும் ஒரே இடத்தில் வேலை செய்து ஓய்வு பெற்றவர்கள் தான். ராமானுஜம் பெரிய ஆபீசரா இருந்து ஓய்வு பெற்றவர். முனுசாமி கடைசிவரை சிப்பந்தியா இருந்து ரிட்டயர்டு ஆனவர். ராமானுஜம் வீட்டில் அவருக்கு நல்ல மரியாதை. அவரோட மருமகள் உள்ளங்கையிலே வைச்சுத்தாங்குவா. மகனும் அப்படித்தான். அவருக்கு ஒரு மகளும் உண்டு அவள் வேற ஊரில் இருக்கிறாள். அப்ப அப்ப அங்கேயும் போய் ஒருவாரம் தங்கி வருவார். அவளும் நல்லா அப்பாவைக் கவனித்து அனுப்புவாள்.

அப்போது எல்லாம் முனுசாமி அல்லாடிப் போயிடுவார் நண்பனைப் பாக்காமல். ராமானுஜம் சம்சாரம் இப்போது இல்லை. மகராசி பூவும் பொட்டுமாய் போய் சேர்ந்திட்டா. முனுசாமி சம்சாரத்தோட மகன் வீட்டில்தான் இருக்கிறார். அவருக்கு அவர் மகன் வீட்டில் கவனிப்பு இல்லை. அவரை அவரின் மருமகள் திட்டியபடி இருப்பாள், இருக்கிற பிரச்சனையிலை இது வேற உயிரை வாங்குது என்று. அதைக் கேட்கும்போது அவருக்கு மனது உடைந்து போய்விடும். நாம் இப்படி பாரமாய் இருக்குறோமே என்று அதை ராமானுஜத்திடம் சொல்லிப் புலம்புவார்.

அப்போதெல்லாம் என்னை மாதிரி இருக்கனும் என்று பெருமையாய் பேசுவார் ராமானுஜம். ராமானுஜத்துக்கு ஒரு ஆசை. நண்பனை குடும்பத்தோட வீட்டுக்கு அழைத்து ஒருவேளை விருந்து வைக்கனும் என்று. தன்னோட பெருமையை காண்பிக்கனும் என்று ஆசை. அதை மருமகளிடம் சொன்னார். அவளும் அதுக்கென்ன கூட்டிட்டு வாங்க. வாற வெள்ளிக் கிழமை மதியம் என்று சொன்னாள். அவரும் முனுசாமியிடம் விஷயத்தைச் சொல்லி விருந்துக்கு அழைத்தார். ஏற்கனவே ராமானுஜம் வீட்டில் அவருக்கு இருக்கும் மரியாதை தெரியும்.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் அவரும் ஒத்துகொண்டார். அவரின் வாக்கிங் நண்பர்கள் போயிட்டு வாங்க என்று ஊக்கப்படுத்தினார்கள். போயிட்டு வந்து சொல்கிறேன் என்று முனுசாமி ஒத்துக்கொண்டார். ராமானுஜமும் அதைப் பெருமையாய் நினைத்தார்.

வெள்ளிக்கிழமை ராமானுஜம் வீட்டிலே விருந்து தயாராகிக்கொண்டு இருந்தது. ராமானுஜம் நண்பனுக்கு பிடித்த அயிட்டம் எல்லாம் செய்யச் சொன்னாரு. மத்தியானம் ஒருமணிக்கு முனுசாமி சம்சாரத்தோட வந்தார். ராமானுஜம் அவர்களை வரவேற்று உட்கார வைத்து சாப்பிட சொல்லி பக்கத்தில் இருந்து மருமகளை பரிமாறச்சொல்லி பார்த்துக்கிட்டார். ரெண்டு பேரும் திருப்தியாகச் சாப்பிட்டார்கள். தாம்பூலம் குடுத்து உபசரிச்சார். முனுசாமிக்கும் அவர் சம்சாரத்துக்கும் கண் கலங்கிடுச்சு. ராமானுஜத்துக்கு அவரின் வீட்டில் இருக்கிற செல்வாக்கு மரியாதை எல்லாம். கொஞ்சம் பொறாமையே படவைத்தது. அவர் வீட்டில் அவருக்கு இருக்கிற மரியாதை ஞாபகம் வந்து கண் கலங்கினார். அவர் ராமானுஜத்தின் மருமகளை மனசார பாராட்டி வாழ்த்திவிட்டு புறப்பட்டார்கள். ராமானுஜம் அவர்களை பஸ் ஸ்ராண்ட் வரை கொண்டு விட்டுட்டு வரப்போனார். அவர்கள் அங்கேயும் அவரை பாராட்டினார்கள். முனுசாமி அன்று சாயங் காலம் வாக்கிங் வாங்க சந்திப்போம் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். ராமானுஜத்துக்கு ரொம்ப சந்தோசம் .அவர்களை வழியனுப்பிட்டு வீட்டுக்குத் திரும்பினார்.

அப்போது அவரின் மருமகள் போனில் அவளின் அம்மாவுடன் பேசிக் கொண்டிருந்தாள். அவளின் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் ஆமாம்மா போயிடுச்சு அந்த ரெண்டும். இது கொண்டுபோய் விடப்போயிருக்கு. இதுவே தண்டம் இது ரெண்டைக் கூட்டிட்டு வருது. அதுரெண்டும் சோத்தையே பார்க்காத மாதிரி முழுங்கினார்கள். இது இலையில் அதை வை இதை வை என்று உயிரை வாங்கிச்சு. இந்த சனியனுக்கு மாதம் வாற 50,000 பென்சனுக்காக எல்லாத்தையும் பொறுத்துக் கொண்டு நடிக்கவேண்டியதாயிருக்கு. இல்லாட்டி இது போய் மகள் வீட்டில் இருந்து பென்சன் காசையும் அங்கே கொடுத்திடும். இதை கட்டி அழவேண்டுமென்று எனக்கென்ன தலை எழுத்து. இதின்ரை பென்சனை நம்பி வீட்டை வாங்கியாச்சு. இல்லாவிட்டால் கழுத்தைப் பிடிச்சு வெளியிலை தள்ளியிருப்பன். அதுக்கு அந்தம்மா எதோ சொல்ல இவளும் "சரி சரி ஏதோ பண்ணித் தொலைக்கிறன் என்று சொல்லிவிட்டு நிமிர்ந்தபோது ராமானுஜத்தை பார்த்து விட்டாள். ராமானுஜத்துக்கு வேர்த்துப்போச்சு.

இவரை பார்த்ததும் அவள், "அவர்களை வழியனுப்பீட்டீங்களா?" கொஞ்சம் இருங்க சாப்பிடலாம்ன்னு சொன்னாள் அவர் "எனக்கு வேணாம்மா பசிக்கவில்லை" என்று சொல்லிட்டு அவரின் அறைக்குள் இருந்த தன் சம்சாரத்தின் படத்துக்கு முன்னால் போய் நின்றார். கண்ணீர் தாரை தாரையாய் ஊற்றியது. இந்த வார்த்தைகளைக் கேட்க முன்பே நீ போய் சேந்துட்டே கொடுத்துவைத்த மகராசின்னு சொல்லி குலுங்கிக் குலுங்கி அழுதார்......

.........அன்றிலிருந்து அவர் சாயங்கால வாக்கிங் மீட்டிங் போறதில்லை.....

--------அ. முத்துவிஜயன்

## நல்ல சாரதி

ஒருவர் தன் மனைவி, அம்மா எல்லோருடனும் காரில் சென்றுகொண்டிருந்தார். நீண்ட நேரமாக ஒரு பொலிஸ் ஜீப் அவரை தொடர்ந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்துக்கு பிறகு அந்த ஜீப் அவரை முந்திச் சென்று அவர் கார் முன் நின்றது. இறங்கி வந்த பொலிஸ்காரர் அவரிடம் சொன்னார் "குட் மோணிங் சார். உங்கள் காரை நாங்கள் அரை மணி நேரமாக கவனித்தோம் நீங்கள் ஸ்பீட் லிமிற்றை, விதிகளை மீறாமல் மற்றைய வாகனங்களையும் மதித்து கார் ஓட்டியதை பாராட்டுகிறோம். சாலை பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு உங்களை சிறந்த ட்ரைவராக தேர்வு செய்து இந்த 10,000.00 ரூபாவை வழங்குகிறோம்" என்றார். அவர் ஒரு பெருமூச்சு விட்டு "இந்த காசைகொண்டு நான் இனி ஓர் லைசென்ஸ் எடுக்கலாம்" என்றார். பொலிஸ்காரர் ஒரு மாதிரி பார்க்க, மனைவி சொன்னார் "தப்பா நினைக்காதீங்க அவர் குடித்துவிட்டு உளறுகிறார்" என்று இதையெல்லாம் பார்த்துவிட்டு அவரின் காது கேட்காத தாய் "நான் அப்பவே சொன்னேன் கேட்டியா? திருட்டுக் காரை எடுத்துக்கிட்டு வந்ததால் எல்லாரும் மாட்டிக்கிட்டோம்"என்றார்.